<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>

<u>தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு, பிப்ரவரி 2023</u>

# NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME EXAMINATION (NMMS) FEB 2023

## அறிவிப்பு

தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத்தின் கீழ் படிப்புதவித்தொகை 2022– 2023 ஆம் ஆண்டில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. உதவித் தொகை வழங்க மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு **<u>தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு (NMMS)</u>** அனைத்து வட்டார அளவில் (Block Level) தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 25.02.2023 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கான வெற்று விண்ணப்பங்களை 26.12.2022 முதல் 20.01.2023 வரை இத்துறையின் https://dge1.tn.gov.in / www.dge1.tn.gov.in என்ற இணையதளம் வழியாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**<u>விண்ணப்பிக்க தகுதியுடையோர்:</u>**

தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் (அரசு, மாநகராட்சி, நகராட்சி மற்றும்அரசு உதவி பெறும் பள்ளிகள் மட்டும்) 2022- 2023 கல்வி ஆண்டில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் அவர்தம் பெற்றோரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3,50,000/-க்கு(ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மிகாமல் இருந்தால் மட்டுமே இத்தேர்வு எழுத தகுதியுடையவர் ஆவார்.

**<u>விண்ணப்பிக்கும் முறை;</u>**

1. NMMS- தேர்விற்கு விண்ணப்பிக்க விருப்பமுடைய தேர்வர்கள் தாங்கள் பயிலும் பள்ளியின் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க இயலும். தலைமையாசிரியர்கள் தேவையான வெற்று விண்ணப்பங்களை 26.12.2022 முதல் 20.01.2023 வரை https://dge1.tn.gov.in /www.dge1.tn.gov.inஎன்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

2. தலைமை ஆசிரியர்கள் வெற்று விண்ணப்பங்களை நடப்புக் கல்வியாண்டில் எட்டாம் வகுப்பு பயின்று வரும் தகுதியுடைய மாணவர்களிடம் கொடுத்து பெற்றோர் உதவியுடன் பூர்த்தி செய்தல் வேண்டும்.

3. புகைப்படம் ஒட்டி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தேர்வர்கள் தாம் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியரிடம் தேர்வுக் கட்டணம் ரூ.50/- உடன் 02.01.2023 முதல் 24.01.2023–க்குள் ஒப்படைத்தல் வேண்டும்.

4. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை ஆன்- லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாட்கள், தேர்வுக் கட்டணம் செலுத்தும் வழிமுறை மற்றும் இணையதள முகவரி குறித்தான விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.
5. பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய நாட்கள் குறித்த விவரம் பெறப்பட்டவுடன், நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் அருகிலுள்ள வட்டார வள மையங்களின் (BRC) உதவியுடன் இணையதள வசதி கொண்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் தங்கள் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ள User Id / Password பயன்படுத்தி மாணவர்களின் விண்ணப்பங்களை இணையதளம் மூலமாகப் பதிவு செய்தல் வேண்டும்.
6. தலைமையாசிரியர்கள் இணையதளம் மூலம் பதிவு செய்தபின் அனைத்து விண்ணப்பங்களையும் தங்கள் வசம் வைத்துக் கொள்ள வேண்டும்.
7. மேலும், பதிவேற்றம் முடிந்தவுடன் ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம் தேர்வுக் கட்டணம் செலுத்திய பிறகு பதிவேற்றம் செய்யப்பட்ட தேர்வர்களின் விவரம் (Summary Report) சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டிய நாள் குறித்துப் பின்னர் தெரிவிக்கப்படும்.

காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் இவ்வலுவலகத்தில் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பெறப்படும் விண்ணப்பங்கள் கட்டாயமாக நிராகரிக்கபடும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. புறச்சரக பதிவெண் கொண்டு தேர்வெழுத தேர்வர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**முக்கிய விவரம்**

| | |
|---|---|
| வெற்று விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட வேண்டிய நாட்கள் | **26.12.2022 முதல் 20.01.2023 வரை** |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தேர்வுக் கட்டணம் தேர்வர்களிடமிருந்து பெற கடைசி நாள் | **24.01.2023** |

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம் : சென்னை–600 006**
**நாள் : 29.12.2022**